

# திக்கம் மத்திய சனசமூக நிலையம்

## ஆண்டறிக்கை - 2016









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூன் முகம்

| | |
|---|---|
| பெயர் | திக்கம் மத்திய சனசமூக நிலையம் |
| முகவரி | திக்கம், அல்வாய். |
| தொலைபேசி இல | 021 226 4440 |
| மின்னஞ்சல் | athickam@gmail.com |
| முகநூல் | திக்கம் |
| பிரதேச செயலாளர் பிரிவு | வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை. |
| பிரதேச சபை | பருத்தித்துறை |
| மாவட்டம் | யாழ்ப்பாணம் |
| பதிவு எண் | J/VC/13/CC/461 |
| ஸ்தாபகம் | 1957 |
| மகுட வாசகம் | "ஓங்குக ஒற்றுமை" |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம்மத்திய சனசமூக நிலையக் கீதம்

இராகம் : நாட்டை                    தாளம் : ஆதி

## பல்லவி

வளர்க / திக்கம் மத்திய நிலையம் வளர்க/
வாழ்க / வாழ்க / சனசமூகம் வாழ்க/

## அனுபல்லவி

ஆனைமுக னருள்செய எழிலுடன் திகழ்ந்தாய்
அகைவரும் மகிழ்ச்சி பொங்க சிறப்புகள் தந்தாய்.

## சரணம்

திக்க முன்னேற்றம் தமதேற்ற மாமென
அறிவுடை இளைஞர் திடமுடன் எண்ணினர்
கண்டனர் கனவு கனவு நனவாக
கண்டீனர் சங்க மமைத்தார் யாபேரும் செயற்பட்டார்
(வளர்க.....)

தாகம் தணிக்க நாளும்தேடி அலைந்தோர்க்கு
சமூக நிலையமருகே நன்னீரளிக்கும் குழாய்க்கிணறு
ஞானமும் கல்வியும் அறிவுக்கு விருந்தாகும் நூலகத்தில்
மாணவரும் மற்றோரும் நயந்து பயன்பெறுவர்
(வளர்க.....)

சைவமும் தமிழும் எம்மிருகண்களா மெனக்கருதி
கலைமகள் பூசை பண்ணொன்றிய பாடலுடன் நூலகத்தில் நிகழ்த்தி
சிறாரிடையே பண்ணிசை கோலம், பேச்சு, போட்டிகள் நடாத்தியும்
பரிசளிப்புவிழா கோலாகலமாக ஆண்டுதோறும் நிகழும்
(வளர்க.....)

உவகை கவர்ந்த புகழுடை கிரிகெட் உதைபந்தாட்டம்
அவ்விளை யாட்டுக்களை சிறந்த திக்க மைதானத்தில் பயின்றார்
கழகங்களிடையே தலைசிறந்த போட்டிகள் நிகழும்
வெற்றிப்பாதையில் வீறு நடைபோடும் கழகம் விருதுபெறும்
(வளர்க.....)

மக்கள் தம்சேவை குன்றாது நிறைவு செயும் பொருட்டு
தருமத்தின் சின்னமாம் பல்நோக்கு சங்கம்முன்
நாற்றிசையு மிருந்து வந்து ஏற்றமுடன் கூடுவர்
அக்காட்சி போக்குவரத்து செய்வோர்க்கு குன்றா இன்பமளிக்கும்
(வளர்க.....)

சந்தியருகே பனஞ்சோலை நடுவே யமைந்துள மதில் சூழ்ந்த மேல்மாடம்
சிறார்கற்கவும் மணவாழ்வு மேற்கொளவும் முக்கிய தேவைகள் நிறைவுசெயவும்
ஐங்கர னருள்செய புகழுடன் துலங்கும் கண்கொள்ளாக் காட்சி
போக்குவரவு செய்வோர் கண்களுக்கு சிறந்த விருந்தளிக்கும் மாட்சி
(வளர்க.....)

**ஆக்கம்**
**அமரர்.ஆ.பொன்னையா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் பாலர் பாடசாலைக் கீதம்

திக்கம் பாலர் பாடசாலை
திசை எட்டும் புகழ் பரப்பி
திடமாக வாழ்க வாழ்க
வாழ்க வாழ்க வாழியவே.

செயன்முறை மூலம் கற்றிடுவோம்
செயல்திறன் ஊக்கம் பெற்றிடுவோம்
செயல்திறன் மிக்க பாலகர் எம்மை
வளர்த்த எம் அன்னை வாழியவே

முறையான கற்றல் கற்றிடவே
எண்கணிதம்மொழித்திறன்
சிந்தனை மிகு ஆற்றல்கள்
வளர்த்திடும் எம் தாயவள்

பார்த்தல் கேட்டல் எண்ணக்கரு
நுண்ணறிவு விருத்திகளை
எம்மிடம் வளர்த்திடும்
உறுதுணையான எம் கூடம்

குழந்தைகள் பூங்காவாம் எம் பள்ளி தன்னிலே
வளரும் உடலும் மலரும் உள்ளமும் கொண்ட
உயிரிகளாய் எம் வாழ்வினில் உயர்ந்திட
வழி அமைத்த எம் பள்ளி வாழியவே

**ஆக்கம்**
**திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன்**
**ஓய்வு நிலை பிரதி அதிபர்**
**(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்கம் மத்திய சனசமூக நிலையம்

### தூர நோக்கு - Vision

புரிந்துணர்வுடன் வாழும் பண்பும் தன்னார்வமும் உயரிய ஒழுக்கமும் கொண்ட சமூகத்தை உருவாக்குதல்.

### பணி நோக்கு - Mission

மானிட ஆக்கமும் உள்ளகத் தூய்மையும் நீதியோடு கூடிய வாழும் பண்பும் கொண்ட தன்னார்வமிகு சமூகத்தை உருவாக்கும் அர்ப்பணிப்புடனும் கடமையுணர்வுடனும் ஒன்றிணைதல்.

## திக்கம்பாலர் பாடசாலை

### தூர நோக்கு - Vision

கற்றல் அனுபவங்களை வலுவூட்டி ஆளுமை மிக்கதோர் உன்னத நற்பிரஜைகளை உருவாக்குதல்.

### பணி நோக்கு - Mission

விளையாட்டின் மூலம் எண்ணக்கரு உருவாக்கம், நுண்ணறிவு விருத்தி, மொழிவிருத்தி, உடலியக்கத் திறன்கள் கொண்ட மாணவர்களாக ஆரம்ப கல்வி நிலைக்குத் தயார்ப்படுத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் எண்ணத்திலிருந்து

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின்2017ம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.V.சுப்பிரமணியம் அவர்களே, கிராம சேவையாளர் திரு.T.ரங்கநாதன், திரு. சி.கௌதமன் அவர்களே, திக்கம்மத்திய சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினரகளே,பொதுச்சபை உறுப்பினர்களே. நலன் விரும்பிகளே அனைவருக்கு மாலை வணக்கங்கள். எமது நிர்வாகமானது 15.01.2016 அன்று கடமைகளை பொறுப்பேற்று 29.01.2016 இன்று புதியதோர் நிர்வகத்திடம் கடமைகளை ஒப்படைக்க இருக்கின்ற இந்த வேளையில் எமது நிர்வாக காலப்பகுதியில் எமக்கு பக்க பலமாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். நீங்கள் தொடர்ந்தும் இனிவரும் நிர்வாகத்தினருக்கும் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

யாழ் மாவட்டத்தில் இயங்கு நிலையில் உள்ள முன்பள்ளி பாலர் பாடசாலைகளில் எமது பாலர் பாடசாலையும் ஒன்றாகும். அந்த வகையில் புலம்பெயர் வாழ் எமது கிராமத்து உறவான திரு.மா.உதயகுமார் (சுவிஸ்) அவர்களின் நிதியுடன் பாலர் பாடசாலையின் செயற்பாடுகளை செவ்வனே நடாத்தி முடித்திருக்கின்றோம். கால்கோள்விழா, விளையாட்டுப் போட்டி, கண்காட்சி, கலைவிழா, வாணி பூசை, தமிழ் மொழித்தின விழா, ஒளிவிழா, ஆங்கில மொழித்தின விழா, சிறுவர் தினம் போன்ற அனைத்து நிகழ்வினையும் சிறப்பாக நடாத்தியிருந்தோம். இந்த வருடம் பாலர் பாடசாலைக்கு புதிதாக ஓர் ஆசிரியரையும் இணைத்துக்கொண்டோம்.

எமது நிலையத்தின் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் பணிக்கர் கோயில் குறடு அமைத்தல் வட்டதெணி வீதி, திக்கம் பாலர் பாடசாலை முன் வீதி, அயிட்டியப்புலம் ஆலய திருத்த வேலை, திக்கம் இளைஞர் கழக மைதானத்தில் நீர்த்தாங்கி அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்துக் கொண்டோம்.

மேலும் இந்த வருடம் எமது கலாசார மண்டபத்தில் அதிகளவான திருமண நிகழ்வுகள் நடைபெற்றன. அதன் மூலமாக அதிகமான வருமானத்தினையும் நாம் பெற்றுக் கொண்டோம். இருந்த பொழுதிலும் சில நிகழ்வுகள் இடப்பற்றாக்குறை காரணமாக வேறு மண்டபங்களுக்கு சென்றமை வேதனையான விடயமாக காணப்படுகின்றது. இனிவரும் நிர்வாகமானது கலாசார மண்டபத்தினை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளில் துரிதமாக செயற்பட வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

பல்கலைக் கழக மாணவன் ஒருவனுக்கு கல்வி ஊக்குவிப்பு தொகையாக மாதாந்தம் 5000/= வீதம் திரு.க.கெங்காதரன் அவர்களின் நிதியுடன் வழங்கி வருகின்றோம். அதே போல எமது ஊரில் உள்ள 10 மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்பு தொகையாக திரு.வி.முகுந்தராஜ் அவர்கள் எமது நிலையத்தினூடாக 6000/= வினை வழங்கி மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கு உதவி வருகின்றோம்.

நாம் ஏனைய சனசமூகங்களுக்கு சவால் விடும் வகையில் அனைத்து விதமான பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றை வாசகர்களின் தேடல்களுக்கு உதவி வருகின்றோம். இதனால் எமக்கு அதிகளவான பாராட்டுதல்கள் கிடைக்கப்பெற்றன என கூறிக்கொண்டு, எமது நிர்வாகமானது ஏதேனும் தவறுகள் செய்திருந்தால் அதற்காக உங்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு எனது தலைமை உரையினை நிறைவு செய்கின்றேன்.

*நன்றி*

29.01.2017

திரு.ந.பிரியதர்சன்
(தலைவர்)
திக்கம் மத்திய சனசமூக நிலையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயலாளர் அறிக்கை - 2016

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் 2017ம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்ட நிகழ்விற்கு தலைமை தாங்கி நடாத்திக் கொண்டிருக்கின்ற நிலையத்தினுடைய தலைவர் அவர்களே, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களே, அல்வாய் மேற்கு, அல்வாய் வடமேற்கு கிராமசேவையாளர் அவர்களே, திக்கம் மத்திய சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களே, பொதுச்சபை உறுப்பினர்களே, திக்கம் வாழ் மக்களே, நலன் விரும்பிகளே உங்கள் அனைவருக்கும் இனிய மாலை வணக்கங்களை உரித்தாக்குகின்றேன். 2016ம் ஆண்டுக்கான எமது நிர்வாக சபையினுடைய காலம் இனிதே நிறைவடையவுள்ள இப் பொன்னான நாளில் செயலாளர் என்ற வகையில் எமது நிர்வாக காலப் பகுதியில் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும், பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதுடன் இனி வரும் நிர்வாகத்துக்கும் நீங்கள் உங்களுடைய பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என அன்பாக வேண்டுகின்றேன். எமது நிர்வாக காலப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகளின் தொகுப்பினை பொதுச்சபை முன்னிலையில் சமர்பிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன். அந்த வகையில்

### திக்கம் பாலர் பாடசாலை

எமது பாலர் பாடசாலையின் செயற்பாடானது 2016ம் ஆண்டு சிறப்பான முறையில் நடைபெற்றதாகவே நான் கருதுகின்றேன். எமது பாலர் பாடசாலையின் நிகழ்வுகளின் அடிப்படையில் கால்கோள்விழா, விளையாட்டுப்போட்டி, கண்காட்சி, கலைவிழா, வாணிபூஜை, தமிழ்மொழித்தின விழா, ஆங்கில மொழித்தின விழா, ஆசிரியர் தினம், அன்னையர் தினம், தந்தையர் தினம், சிறுவர் தினம், ஒளிவிழா, மாணவர்கௌரவிப்பு என அனைத்து நிகழ்வுகளையும் சிறப்பாக நடாத்தி முடித்திருக்கின்றோம். வழமைபோன்று இவ்வருடமும் கால்கோள் விழாவின் போது மாணவர்களுக்கான சீருடை, சாப்பாட்டு பெட்டி, தண்ணீர் போத்தல், கொம்பாஸ், இன்னும் பல கற்றல் கற்பித்தல் உபகரணங்களை புலம்பெயர்ந்து சுவிஸ் நாட்டில் வசித்து வரும் எமது கிராமத்து உறவான திரு.திருமதி.மா.உதயகுமார் குடும்பத்தினரால் மாணவர்களுக்கு இலவலசமாக வழங்கப்பட்டன. ஆசிரியர்களுக்கான வேதனமும் அவர்களால் மாதாமாதம் தொடர்ச்சியாக வழங்கி வருகின்றனார்கள். அவர்களுக்கு இந்த பொன்னான வேளையில்மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். தொடர்ந்தும் உங்களுடைய சேவையினை திக்கம் பாலர் பாடசாலைக்கு வழங்க வேண்டும் என அன்பாக வேண்டி நிற்கின்றேன். பாலர் பாடசாலையின் கண்காட்சி நிகழ்விற்கு கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட திருவாளர் சி.சிவம் (தலைவர் வர்த்தகம் சங்கம், நெல்லியடி) அவர்கள் ஒரு தொகுதி பயிற்சிப் புத்தகங்களை வழங்கியிருந்தார். அவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாலர் பாடசாலையின் விளையாட்டு நிகழ்வுக்கு முதன்மை அதிதியாக கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.தம்பிராசா குருகுலராசா அவர்களினால் மாகாண அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் எமது பாலர் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணம் ஒன்று வழங்கப்பட்டு மாணவர்கள் இன்று அதனை பயன்படுத்தி வருகின்றார்கள். அத்துடன் பொறியிலாளார் திரு.கணேஸ் அவர்களுடன் நாம் தொடர்பு கொண்டு ரூபா ஐம்பதாயிரம் பெறுமதியான அறுகோணி வடிவத்தினை கொண்ட மூன்று மேசையினையும் பதினெட்டு கதிரையினையும் பெற்றுக்கொண்டோம். அதனை நடப்பு ஆண்டில் மாணவர்களின் பாவனைக்கு கையளிக்கவுள்ளோம். இந்த வேளையில் பொறியியலாளர் திரு.இ.கணேஸ்வரன் குடும்பத்தினருக்கும் மனமார்ந்த நன்றியினையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பாலர் பாடசாலையின் பணிப்பாளர் திருமதி.இந்திராணி ஸ்ரீரங்கன் அவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் பாலர் பாடசாலைக்குசெல்வி.தா.சோபிதா என்ற புதிய ஆசிரியர் ஒருவரை இணைத்துக்கொண்டோம். தற்போது எமது பாலர் பாடசாலையில் ஐந்து ஆசிரியர்கள் சேவையாற்றி வருகின்றார்கள். எமது பாடசாலையின் வினைத்திறனும் விளைதிறனும் கூடிய செயற்பாட்டுக்கு தங்களை அர்ப்பணித்த பாலர் பாடசாலை பணிப்பாளர், பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கும் மனமார்ந்த நன்றியினையும, பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திக்கம் மத்திய சனசமூக நிலையம்**

பொது நூலகங்களுக்கு இணையாக எமது நிலையத்தில் அனைத்து பத்திரிகைகளையும் வாசகர்களின் பயன்பாட்டுக்கு வழங்கி வருகின்றோம். அந்த வகையில் பத்திரிகைகளை அன்பளிப்பாக வழங்கிவருகின்ற அன்புள்ளங்களின் விபரம்

| | |
|---|---|
| திரு.க.திருவரங்கன் | – தினகரன், Daily News |
| திரு.ஜெ.துசாந் | – மித்திரன், வீரகேசரி |
| திரு.கி.அமிர்தலிங்கம் | – தினக்குரல் பத்திரிகை |
| திரு.த.தயாபரன் | – வலம்புரி பத்திரிகை |
| திரு.நா.குமாரசிங்கம் | – மெட்றோ News, சுடரொளி பத்திரிகை |
| திரு.க.உதயசீலன் | – சமகாலம் சஞ்சிகை |
| திரு.ச.செல்வக்குமார் | – விஜய், வானவில், ஒளி அரசி, ஜீனியர் கேசரி, சோதிடகேசரி, சுட்டி கேசரி, சுகவாழ்வு, தமிழ்மிறர், ஜீனியஸ், |
| இரத்தினா ஸ்ரோர்ஸ் | – அழகி சஞ்சிகை |
| உதயன் பத்திரிகை நிறுவனம் | – உதயன் பத்திரிகை |

மேற்படி பத்திரிகைகளை அன்பளிப்பாக வழங்கிவருகின்ற அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக்கொண்டு நடப்பு வருடத்திலும் உங்களுடைய சேவையினை வழங்க வேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிலையத்தினூடாக ஒப்பந்த அடிப்படையிலும் சில வேலைத்திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அந்த வகையில்

பணிக்கர் கோவில் குறடு அமைத்தல்
வட்தெணி வீதி புணரமைத்தல்
திக்கம் பாடசாலை முன் வீதியின் ஒரு பகுதி
அயிட்டியப்புல முருகன் கோயில் வேலை
திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் தண்ணீர் தாங்கி
அமைத்தல்போன்ற வேலைத்திட்டங்களை செவ்வனே நிறைவேற்றியுள்ளோம்.

பல்கலைக்கழக மாணவன் ஒருவனின் கல்வி செயற்பாட்டுக்காக அமரர் வே.கணேசமூர்த்தி ஞாபகார்த்தமாக அவருடைய மகன் திரு.க.கெங்காதரன் அவர்கள் எமது நிலையத்தினூடாக கல்வி உதவு தொகையாக மாதாந்தம் 5000/= ரூபா வீதம் வழங்கி வருகின்றார். அதே போல திரு.வி.முகுந்தராஜ் அவர்கள் தன்னுடைய பெற்றோர் ஞாபகார்த்தமாக எமது ஊரில் உள்ள பத்து மாணவர்களுக்கான கல்விச் செயற்பாட்டுக்கு தனியார் கல்வி நிலையத்துக்காக மாதாந்தக் கொடுப்பனவினை எமது நிலையத்தினூடாக வழங்கி வருகின்றார். மேற்படி இருவருக்கும் மனமார்ந்த நன்றியினை கூறிக் கொள்வதுடன் தொடர்ந்தும் உங்கள் சேவையினை வழங்க வேண்டும் என்று அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

**திக்கம் கலாசார மண்டபம்**

இந்த வருடம் புலம்பெயர் தேசத்து உறவுகளின் நிதியுதவி பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் நிதி கிடைக்காத பட்சத்திலும் கலாசார மண்டபத்தினூடாக கிடைக்கப்பெற்ற வருமானத்தினூடாகவும் கதிரை மற்றும் ஏனைய தளபாடங்களினூடாக கிடைக்கப் பெற்ற வருமானத்தினுடாகவும், திருமண நிகழ்வு, பூப்புனித நீராட்டுவிழாவிற்கான மதிய உணவினை எமது இளைஞர்களின் உதவியுடன் நாம் சமைத்து வழங்கியதனூடாகவும் கிடைக்கப் பெற்ற வருமானத்தினூடாக எமது செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்லக்கூடியதாக இருந்தது. இம்முறை பத்திற்கும் மேற்பட்ட திருமண நிகழ்வுகள் எமது கலாசார மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. மேற்படி கலாச்சார மண்டப நிகழ்வுகள் மற்றும் சமையல் வேலைகளுக்கு உதவிபுரிந்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். மண்டப இட பற்றாக்குறை காரணமாக கிட்டத்திட்ட ஐந்துக்கு அதிகமான திருமண நிகழ்வுகளை நடாத்த முடியாமல் போயிருந்தது. மேலும் எமது கிராமத்தவர்களின் திருமண நிகழ்வுகளும், வெளியூர் மண்டபங்களுக்கு கொண்டு சென்று நடாத்தவேண்டி இருந்தது. இனி வரும் நிர்வாகமானது கலாசார மண்டபத்தினை காலத்தின் தேவை கருதி அதனை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அன்பாக வேண்டி நிற்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்தினுடைய பண்பாட்டு பெருவிழா இம்முறை எமது கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.தம்பிராாசா குருகுலராசா அவர்கள் கலந்துகொண்டு நிகழ்வினை சிறப்பித்திருந்தார். அத்துடன் சொண்ட் நிறுவனத்தின் புலம்பெயர் தொழிலாளர் தினத்தினையும் வேலைவாய்பு தொடர்பான கலந்துரையாடலையும் பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி பயனாளிகளின் பிள்ளைகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வையும் எமது கலாசார மண்டபத்தில் நடாத்தியிருந்தனர். மேற்படி நிகழ்வுகள் எமது நிலையத்துக்கு பெருமை சேர்த்த விடயமாகக் காணப்படுகின்றது.

**பரிசளிப்புவிழா**

எமது நிலையத்தினுடைய பரிசளிப்பு விழாவானது காலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை பணிப்பாளர் திரு. சத்தியமூர்த்தி அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக அண்மையில் நடைபெற்ற அதிபர் சேவை பரீட்சையில் சித்தியடைந்து எமது ஊருக்கு பெருமை சேர்த்தவர்களான எமது ஊரின் மைந்தர்கள் திரு.இ.ராஜசீலன், திரு.ச.சுவேந்தன், திரு.செ.தேவகுமார், திரு.ப.பார்த்தீபன், திரு.க.உதயசீலன், திரு.இ.சுதர்சன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேற்படி பரிசளிப்பு நிகழ்வில் வாணி பூஜையினை முன்னிட்டு எமது நிலையத்தில் திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு (152புள்ளி) மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கும், க.பொ.த சாதாரண பரீட்சையில் 5 A க்கு மேலே எடுத்தவர்களுக்கும், கல்வி பொ.உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவர்களுக்கும் பரிசில்களை வழங்கி கௌரவித்துக்கொண்டோம். மேற்படி பரிசளிப்பு விழாவிற்கு அமரர் ஆ.சுறோமி ஞாபகார்த்தமாக திரு.ஆ.ரூபகாந்தன் 20000/= ரூபாவினையும் அமரர் அருளம்பலம் ஞாபகார்த்தமாக திரு.அ.அரவிந்தன் 20000/= ரூபாவினையும், அமரர் பரராஜசிங்கம் ஞாபகார்த்தமாக திரு.ப.சுரேந்திரன் 10000/= ரூபாவினையும் அன்பளிப்பாக வழங்கியிருந்தார்கள். அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியினையும், பாராட்டுக்களையும் தெரிவித்தக்கொள்வதோடு, இனி வரும் காலங்களிலும் உங்கள் சேவை தொடர வேண்டும் என அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

**பரிசு பெறுவோர் விபரம்**

**01. புலமைப்பரிசில் :**

அ.வினுஜா
ம.மனியா
கு.பைரவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. க.பொ.த.சாதாரண தரம்

| | |
|---|---|
| சி.கோசலா | 9A |
| மு.வித்தியா | 9A |
| ஜெ.ஜெனுசா | 8A C |
| ச.திலானி | 8A S |
| ச.திவ்வியா | 7A 2B |
| ச.நிருஜா | 6A 3B |

03. க.பொத.உயர்தரம்

இ.நாமகள், கலைப்பீடம், பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

ந.இசைப்பிரியன், பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்,

வி.ஆதூரி , கணனிக்கற்கை நெறி, பல்கலைக்கழகம், கொழும்பு

## கௌரவிப்பு விழா

எமது சனசமூக நிலையத்தின் முன்னைநாள் தலைவரும் பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலராக இருந்து ஓய்வு பெற்றவருமான திரு.ச.ஶ்ரீராமச்சந்திரனுடைய மணி விழாவின்போது தினக்குரல் பத்திரிகை மூலமாக அவரினை வாழ்த்தி அவரினை கௌரவப்படுத்தியிருந்தோம். மேலும் ஏற்றுமதியாளருக்கான ஜனாதிபதி விருது பெற்ற வெ.ஜிலான்ட் ஏற்றுமதி நிறுவனத்தினுடைய உரிமையாளர் திரு.K.T.ஐங்கரன் அவர்களையும், நல்லாசிரியரக்கான குரு பிரதீபா ஜனாதிபதி விருதுபெற்ற எமது நிலையத்தினுடைய மன்னைநாள் தலைவரும் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி ஆசியருமான திரு.பா.தணிகைவேள் அவர்களையும், பாடசாலை மாணவர்களுக்கான தேசிய மட்டப் போட்டியில் திறமையினை வெளிக்காட்டி எமது ஊருக்கு பெருமைசேர்த்த ஹாட்லிக் கல்லூரி மாணவனான செல்வன்.நா.பிரவீன் அவர்களையும் எமது பரிசளிப்பு விழாவின் போது நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்திருந்தோம்.

## திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம்

எமது விளையாட்டுக்கழகமானது இன்று உதைபந்தாட்டத்தில் யாழ் மாவட்டத்தில் தனக்கென தனியான இடத்தினை பெற்றுக்கொண்டு எமது கிராமத்துக்கு பெருமைசேர்த்த வண்ணமுள்ளது. அண்மையில் வலிகாமம் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நடாத்திய வடக்கின் சுப்பர் சிங் போட்டியில் அரையிறுதிப் போட்டிவரை முன்னேறி அரையிறுதிப் போட்டியில் மிகவும் பலம் வாய்ந்த மன்னர் கில்லறி விளையாட்டுக் கழகத்திடம் துரதிஸ்டவசமாக தோல்வியடைந்தது. இருப்பினும் மூன்றாம் இடத்துக்கான போட்டியில் கிளிநொச்சி உருத்திபுர அணியுடன் போட்டியிடவுள்ளது. யாழ் மாவட்ட ரீதியிலான மயிலோக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கால் இறுதிப் போட்டிவரை முன்னேறியிருந்தது. அத்துடன் யாழ்மாவட்ட சிறந்த நன்நடத்தை அணி என்ற விருதினை தனதாக்கி ஊருக்குப் பெருமைசேர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை எமது விளையாட்டுக் கழகமானது யாழ்மாவட்ட ரீதியில் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியினை நடாத்தி முடித்திருக்கின்றது. லீக் போட்டியில் இருந்து மின்னொளியில் போட்டியினை நடாத்தி அதிகளவான வருமானத்தை பெற்றுக்கொண்டது. இப் போட்டிக்கு வடக்கு மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் திரு.தம்பிராசா குருகுலராசா அவர்களும், சிறப்பு விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் திரு.ச.சுகிர்தன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். உதைபந்தாட்ட போட்டியின் இறுதிநாளன்று எமது ஊரின் அனைத்து மைந்தர்களும் கலந்துகொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டமை சிறப்பான ஒரு விடயமாக காணப்படுகின்றது. மேலும் வடக்கு மாகாண சபையின் பத்துலட்சம்ரூபா நிதியில் மலசலகூடம், தண்ணீர்தாங்கி, குழாய்க்கிணறு என்பவற்றினை புதிதாக நிறுவியுள்ளனர் என கூறிக்கொண்டு இனி வரவிருக்கும் நிர்வாகத்தினருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டு செயலாளர் அறிக்கைய நிறைவு செய்கின்றேன்.

வைர விழாவினை முன்னிட்டு 14.08.2016 நடைபெற்ற விசேட பொதுக்கூட்டத்தில் வைரவிழா மலருக்கான மலர்க்குழு, விளையாட்டுக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. அவ் மலர்க் குழுவின் விபரம் வருமாறு.

**மலர்க்குழு விபரம்**

திரு.வே.விசுவலிங்கம்
திரு.மு.செ.சரவணபவ
திரு.மு.இரத்தினம்
திரு.க.சுதேஸ்
திரு.வே.ஞானசம்பந்தன்
திரு.க.சயந்தன்
திரு.செ.சதாகரன்
திரு.வ.திருக்குமரன் (சதீஸ்)
திரு.கு.தினேஸ்

**விளையாட்டு குழு விபரம்**

திரு.இ.இராஜசீலன்
திரு.ப.பார்த்தீபன்
திரு.பா.தணிகைவேள்
திரு.இ.முருகரூபன்
திரு.தெ.ஜெயகாந்
திரு.ந.பிரியதர்சன்
திரு.கு.உமேஸ்
திரு.க.திருவரங்கன்
திரு.க.நிதர்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2017ம் ஆண்டு முன்னெடுக்கப்படவேண்டிய பொதுவான வேலைத்திட்டங்கள்

01. திக்கம் கலாசார மண்டபத்தினை விஸ்தரித்தல்
02. வீதி விளக்குகள் பொருத்துதல்
03. விளையாட்டு மைதானத்தை சுற்றி குறடு அமைத்தல்
04. விளையாட்டு மைதான காணியின் ஒரு பகுதியினை வாங்குதல்
05. விளையாட்டு மைதானக்கு பாதுகாப்பு எல்லைச்சுவர், கம்பிவேலி அமைத்தல்
06. விளையாட்டு மைதானத்தில் பார்வையாளர் அரங்கு அமைத்தல்
07. மைதான காணிகளை கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கியவர்களின் பெயர்களை நினைவுக் கல்லில் பொறித்தல்
08. மைதான மாதிரி வரைபடம் வரைதல்
09. ஆரம்ப சுகாதார நிலையத்தினை புனரமைத்தல்
10. திக்கம் இந்து மயானம் புனரமைப்பு செய்தல்
(வைர விழாவினை முன்னிட்டு திரு.K.T.ஐங்கரன் அவர்கள் தனது தந்தையார் ஞாபகார்த்தமாக பத்துலட்சம் ரூபாவிற்கு நவீன முறையில் புனரமைத்து தரவரதாக உறுதிமொழி வழங்கியுள்ளார்.
11. வீதிகள் புனரமைப்பு செய்தல்
    01. பள்ளத்தெண்ணி வீதி
    02. மாதா கோவில் வீதி
    03. பணிக்கர் கோவில் வீதி
    04. குமாரியோடை வீதி
    05. பாடசாலை முன் வீதியின் ஒரு பகுதி
    06. நீர்வளைப் பிள்ளையார் கோவில் வீதி
    07. இளைய குட்டிபுல வீதி
    08. கிளிவெட்டி வீதி
    09. வவுனில் வீதி
    10. மந்திலாவத்தை வீதி
    11. மைதான வீதி
12. குளங்கள் புனரமைத்தல்
13. கலாசார மண்டபத்துக்கான கதிரைகள் கொள்வனவு செய்தல்
14. வெள்ள வாய்க்கால்கள் புனரமைப்பு செய்தல்
15. போட்டோக்கொப்பி இயந்திரம் கொள்வனவு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலர் பாடசாலையின் 2017ம் ஆண்டுக்கான திட்ட முன்மொழிவுகள் :**

01. திக்கம் பாலர் பாடசாலைக்கு பெயர்ப்பலகை நாட்டுதல்
02. பாலர் பாடசாலை விளையாட்டு முற்றத்துக்கு மண் நிரப்புதல்
03. கரும்பலகைக்கு வர்ணம் பூசுதல்
04. தொலைபேசி வசதியினை ஏற்படுத்துதல்
05. விளையாட்டு ராட்டிணம் திருத்துதல்
06. பாலர் பாடசாலை கூரையினை திருத்தம் செய்தல்
07. மாணவர்க்களுக்கான மலசலகூடம் நவீனப்படுத்துதல்
08. மல்ரி மீடியா (பல்லூடாகம்) வசதியினை ஏற்படுத்துதல்
09. இறப்பர் முத்திரை செய்தல்
11. பாலர்பாடசாலைக்கு வர்ணம் பூசுதல்
12. மாணவர்களுக்கான மரத்தளபாடம் கொள்வனவு செய்தல்

**குறிப்பு :** வைர விழாவினை முன்னிட்டு கலாசார மண்டபத்தினை விஸ்தரிப்பதுடன் நூல் நிலைய திருத்த வேலைகளும் வர்ணம் பூசுதலும் முன்னுரிமை அடிப்படையில் செய்தல் வேண்டும்.

போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவேண்டி உள்ளது. பொதுச் சபை உறுப்பினர்களாகிய நீங்கள் மேற்கூறிய வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு உங்களால் இயன்ற முயற்சியினை மேற்கொள்ள வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

*நன்றி*

29.01.2017

*திரு.க.சுதேஸ்*
*செயலாளர்*
*(திக்கம் மத்திய சன சமூக நிலையம்)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்கம் மத்திய சனசமூக நிலையம்
# வைரவிழா
## (1957—2017)

## உத்தேசித்துள்ள நிகழ்வுகள்

| இல | போட்டி வகை | பிரிவு |
|---|---|---|
| 1 | பேச்சு | ஆரம்பம் |
| 2 | | மத்திய |
| 3 | | மேல் |
| 4 | கட்டுரை | ஆரம்பம் |
| 5 | | மத்திய |
| 6 | | மேல் |
| 7 | வினாவிடை | ஆரம்பம் |
| 8 | | மத்திய |
| 9 | | மேல் |
| 10 | பா ஓதுதல் | ஆரம்பம் |
| 11 | | மத்திய |
| 12 | | மேல் |
| 13 | வில்லுப் பாட்டு | பொது |
| 14 | முட்டி உடைத்தல் | பாரம்பரிய விளையாட்டுக்கள் கிராம மட்டத்தில் |
| 15 | வேக நடை | |
| 16 | கிடுகு பின்னுதல் | |
| 17 | தலையணை சண்டை | |
| 18 | கயிறு இழுத்தல் | |
| 19 | கிறிஸ் கம்பம் ஏறுதல் | |
| 20 | சிறுவர் நிகழ்வு 1 | |
| 21 | சிறுவர் நிகழ்வு 2 | |
| 22 | சிறுவர் நிகழ்வு 3 | |
| 23 | சிறுவர் நிகழ்வு 4 | |
| 24 | சிறுவர் நிகழ்வு 5 | |
| 25 | சிறுவர் நிகழ்வு 6 | |
| 26 | சிறுவர் நிகழ்வு 7 | |
| 27 | சிறுவர் நிகழ்வு 8 | |
| 28 | சிறுவர் நிகழ்வு 9 | |
| 29 | சிறுவர் நிகழ்வு 10 | |
| 30 | சிறுவர் நிகழ்வு 11 | |

| இல | போட்டி வகை | பிரிவு |
|---|---|---|
| | மீ /வ | மீ /வ |
| 31 | உதைபந்தாட்டம் | மாகாணம் |
| 32 | கிரிக்கெட் | மாகாணம் |
| 33 | கபடி | மாவட்டம் |
| 34 | வலைபந்து | மாகாணம் |
| 35 | கரப்பந்து | மாகாணம் |
| 36 | வீதியோட்டம்-ஆண் | மாகாணம் |
| 37 | வீதியோட்டம்-பெண் | மாகாணம் |
| 38 | சைக்கிள் | தேசியம் |
| 39 | தளபாடம்-மண்டபம் | கிராம மட்டத்தில் |
| 40 | மின்இணைப்பு திருத்தம் | கிராம மட்டத்தில் |
| 41 | வீதி விளக்கு அமைத்தல் | கிராம மட்டத்தில் |
| 42 | திக்கம் பாடசாலை | கிராம மட்டத்தில் |
| 43 | வர்ணம் பூசுதல் | கிராம மட்டத்தில் |
| 44 | கடலை | கிராம மட்டத்தில் |
| 45 | திக்கம் பாலர் பாடசாலை | கிராம மட்டத்தில் |
| 46 | பெயர் பலகை | கிராம மட்டத்தில் |
| 47 | முத்தமிழ் விழா | மாகாணம் |
| 48 | சிரம தானம் | கிராம மட்டத்தில் |
| 49 | இரத்த தான முகாம் | மாவட்டம் |
| 50 | ரீ சேட் அங்கத்தவர்களுக்கு | கிராம மட்டத்தில் |
| 51 | வாழ்வாதார உதவி 1 | மாகாணம் |
| 52 | வாழ்வாதார உதவி 2 | மாகாணம் |
| 53 | வாழ்வாதார உதவி 3 | மாகாணம் |
| 54 | வாழ்வாதார உதவி 4 | மாகாணம் |
| 55 | மந்திகை | மாவட்டம் |
| 56 | போதை எதிர்பு | மாவட்டம் |
| 57 | மர நடுகை | மாவட்டம் |
| 58 | புத்தக கொள்வனவு | நூலகம் |
| 59 | புத்தக வெளியீடு | தேசியம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும் - 2016

**இடம் : திக்கம் கலாசார மண்டபம்**
**காலம் : 15.01.2016 (வெள்ளி) பி.ப 7.00 மணி**
**விடயம் : வருடாந்தபொதுக்கூட்டமும், புதிய நிர்வாகசபை தெரிவும்**

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும், 2016ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவும் நிலையத்தினுடைய தலைவர் திரு.க.திருவரங்கன் தலைமையில் இரண்டு நிமிட இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. தலைவர் தனது உரையில் 15.01.2015 அன்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்ட தமது நிர்வாகமானது 15.01.2016 இன்று புதிய நிர்வாகத்திடம் நிர்வாக கடமைகளை ஒப்படைக்க இருக்கின்ற இந்த வேளையில் தமது நிர்வாக காலப்பகுதியில் பல வழிகளிலும் உதவி புரிந்தத அனைத்து அன்புள்ளங்களுக்கம் முதலில் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டு தனது உரையினை தொடர்ந்து நிகழ்த்தினார். மேலும் திக்கம் நலன்புரிச்சங்கம், சுவிஸ், திக்கம் நலன்புரிச்சங்கம் கனடா, புலம்பெயர்ந்து வேறு நாடுகளில் வசித்துவரும் அனைத்து எமது உறவுகளுக்கும் பொங்கல் வாழ்த்துக்களையும், எமது நிர்வாகத்துக்கு பக்கபலமாக நின்றமைக்காக நன்றியினையும் தெரிவித்துக்கொண்டார். தமது நிர்வாக காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்துக்கூறி நிதியுதவி வழங்கிய அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றிகூறி தனது உரையினை நிறைவு செய்து கொண்டார்.

தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க செயலாளர் அவர்களினால் 2015ம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிக்கையும், 2015ம் ஆண்டுக்கான செயலாளர் அறிக்கையும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இதில் தவறுகள் எதுவும் இல்லையென திரு.மு.செ.சரவணபவா முன்மொழிய திரு.கு.நவனீதன் வழிமொழிய சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. தொடர்ந்து தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க பொருளாளர் அவர்களினால் பொருளாளர் அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் தவறுகள் எதுவும் இல்லையென திரு.ச.சாந்தரூபன் முன்மொழிய திரு.க.சிவசோதி வழிமொழிய சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

தொடர்ந்து தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அவர்களினால் சிறிது உரையாற்றப்பட்டது. அவர் தனது உரையில் யாழ்மாவட்டத்தில் இருக்கக் கூடிய சனசமூக நிலையங்களில் திக்கம் மத்திய சனசமூக நிலையம் முதன்மை வாய்ந்தது எனவும் நிதி வளங்கள் புலம்பெயர்வாழ் உறவுகளால் வழங்கப்பட்டு சிறந்த முறையில் நிர்வகிக்கப்பட்டுவரும் நிலையில் பொதுக்கூட்டத்தில் பிரசன்னமாகியிருப்போர் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருப்பது கவலையளிக்கின்றது எனவும் இது எதிர்காலத்தில் இவ் நிலையத்தை கேள்விக்குள்ளாக்கும் எனவும் கூறி தன்னுடைய உரையை நிறைவு செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க 2016ம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெற்றது.

| பதவி | பெயர் | முன்மொழிந்தவர் | வழிமொழிந்தவர் |
|---|---|---|---|
| தலைவர் | திரு.ந.பிரியதர்சன் | திரு.ச.சாந்தரூபன் | திரு.தி.சத்தியராஜ் |
| செயலாளர் | திரு.க.சுதேஸ் | திரு.ச.சாந்தரூபன் | திரு.க.சிவசோதி |
| பொருளாளர் | திரு.செ.சதாகரன் | திரு.க.திருவரங்கன் | திரு.க.ஜெயந்தன் |
| உப தலைவர் | திரு.கு.நவனீதன் | திரு.க.நிரோசன் | திரு.க.திருவரங்கன் |
| உப செயலாளர் | திரு.க.ஜெயந்தன் | திரு.கு.நவனீதன் | திரு.ச.சாந்தரூபன் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள்<br>திரு.மு.இரத்தினம் | திரு.ச.சாந்தரூபன்<br>திரு.ச.விதுரன்<br>திரு.தி.சிவசக்தி<br>திரு.கு.தினேஸ்<br>திரு.சி.கார்த்தீபன்<br>திரு.ப.கணேசபாலினா<br>திரு.க.சதீஸ்<br>திரு.கி.அமிர்தலிங்கம்<br>திரு.மு.செ.சரவணபவா | திரு.க.திருவரங்கன் | திரு.க.ஜெயந்தன் |
| உபநூலகர் | திரு.க.நிரோசன் | திரு.சி.கார்த்தீபன் | திரு.கு.நவனீதன் |
| கணக்காய்வாளர் | திரு.ச.சரவணபவான் | திரு.ச.சாந்தரூபன் | திரு.க.திருவரங்கன் |

தொடர்ந்து திரு.ச.சாந்தரூபன் அவர்கள் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானக் காணியினை கொள்வனவு செய்து தந்துதவிய திரு.க.பிறைசூடி அவர்களதும், திக்கம் நலன்புரிச்சங்கம் சுவிஸ் போன்ற பெயர்களை மைதானத்தின் ஒரு பகுதியில் பொறித்தல் வேண்டும் என ஒரு வேண்டுகோள் ஒன்றினை பொதுச்சபை கூட்டத்தில் முன்வைத்தார். அதனை ஆராய்ந்த பொதுச்சபையானது மேற்படி கோரிக்கை நியாயமானது என ஏற்றுக்கொண்டது. இதனை திரு.கு.தினேஸ் முன்மொழிய, திரு.கஜெயந்தன் வழிமொழிய, சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.

தொடர்ந்து நடப்பாண்டின் தலைவர் அவர்களினால் திக்கம் நலன்புரிச்சங்க சுவிஸ் உறுப்பினர் திரு.க.தாமரைச்செல்வன் அவர்களை சிறு கருத்துக்களை வழங்குமாறு கேட்டுக்கொண்டார். தலைவரின் வேண்டுகோளுக்கு இணங்க திரு.க.தாமரைச்செல்வன் அவர்கள் சபை முன் சில கருத்துக்களை முன்வைத்தார். புலம்பெயர் வாழ் மக்களுக்கு தகவல்கள் உடனுக்குடன் பரிமாற்றம் செய்து கொள்ளல் வேண்டும் எனவும், முகநூலினூடாக தகவல்களை உடனுக்குடன் தெரிவித்துக்கொள்ளல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் எனவும் திக்கம் நலன்புரிச் சங்கம் சுவிஸ், திக்கம் நலன்புரிச்சங்கம் கனடா ஆகியவற்றின் ஒன்று கூடலுக்கு ஒரு மாதத்திற்கு முன்னரே கூட்டத்துக்கான வாழ்த்துக்களையும், நிலையத்தினுடைய தேவைகளையும் தெரியப்படுத்த வேண்டும் எனவும் கூறி பொதுக் கூட்டம் தொடர்பான விடயங்களை முகநூலில் குறிப்பிடப்படாமையும், கூட்டத்துக்கு வருகை தந்தவர்களினுடைய எண்ணிக்கை குறைவாக இருப்பதையும் கூறி தனது வருத்தத்தை தெரிவித்துக்கொண்டு தனது உரையை நிறைவு செய்துகொண்டார்.

தொடர்ந்து பொதுச்சபை உறுப்பினர் ஒருவரால் எமது பிரதேசத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு இந்த வருடம் பல மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அதில் ஒரு மாணவன் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவன் அவனால் தன்னுடைய பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொள்ள முடியாதுள்ளது எனக்கூறி அந்த மாணவனுக்கு உதவி செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு பதிலளித்த புலம்பெயர்வாழ் உறவான திரு.க.தாமரைச்செல்வன் அவர்கள் மாணவனுடைய பெயரினை குறிப்பிடாது முகநூலில் இதனை தெரியப்படுத்துமாறும், புலம்பெயர் வாழ் உறவுகள் இதனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என கூறினார். தொடர்ந்து இவ் விடயத்தை முகநூலில் பிரசுரிப்பது என பொதுச்சபை அனுமதி வழங்கியது. அதனை நிர்வாகமும் ஏற்றுக்கொண்டது.

தொடர்ந்து செயலாளர் அவர்கள் தமது நிர்வாக காலப்பகுதியில் நாம் சிறப்பாக செயற்பட அனைவரும் தங்களுடைய உதவிகளை வழங்க வேண்டும் எனவும் புலம்பெயர்வாழ் உறவுகள் தொடர்ந்தும் நிதியுதவியினை வழங்க வேண்டும் எனவும் பத்திரிகைகளை அன்பளிப்பாக வழங்குவோர் தொடர்ச்சியாக பத்திரிகைகளை வழங்க வேண்டுமெனவும் கூறி பொதுக் கூட்டத்துக்கு வருகைதந்த அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்களையும் நன்றியினையும் தெரிவித்துக்கொண்டு இரவு 9.00 மணிக்கு கூட்டத்தை நிறைவு செய்து கொண்டார்.

**நன்றி**

க.சுதேஸ்
செயலாளர்
(திக்கம் மத்திய சன சமூக நிலையம்)

17.01.2016 (ஞாயிறு) பி.ப 5.00 மணியளவில் நடைபெற்ற நிர்வாகசபை கூட்டத்தில் செயலாளரினால் அறிக்கை வாசிக்கப்பட்டு திருத்தங்கள் எதுவும் இல்லையென திரு.கு.தினேஸ் முன்மொழிய, திரு.க.ஜெயந்தன் வழிமொழிய நிர்வாகசபை ஏற்றுக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாளர் அறிக்கை - 2016
## 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரை

அனைவருக்கும் வணக்கம்

எமது சனசமூக நிலையத்தின் 2016ம் ஆண்டிற்கான பொருளாளர் அறிக்கையினை உங்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

2016ம் ஆண்டிற்கான வருமானங்களினதும் செலவுகளினதும் சுருக்கம் வருமாறு

ஆரம்ப காசு மீதி ரூபா 59751.19/=
ஆரம்ப வங்கி மீதி ரூபா 66 0134.58/=

கிடைக்கப்பெற்ற மொத்த வரவுகள் – ரூபா 1860032.98
ஏற்பட்ட மொத்த செலவுகள் – ரூபா 2165526.79/=

இறுதி காசு மீதி – ரூபா 129023.20/=
இறுதி வங்கி மீதி ரூபா 285368.76/=

எமது நிர்வாகம் விடை பெறக் காத்திருக்கும் இத் தருணத்தில் எமக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் புலம் பெயர்ந்து வாழும் உறவுகள் அனைவருக்கும் எமது வருடாந்த நிகழ்வுகளை சிறப்பாக நடாத்த அனுசரணை வழங்கி எமக்கு பக்க பலமாக இருந்த எமது நிலைய ஊழியர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*நன்றி*

செ.சதாகரன்
பொருளாளர்
திக்கம் மத்திய சனசமூக நிலையம்.
29.01.2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01.01.2016 தொடக்கம் 31.12.2016 வரையான காலப்பகுதிக்கான வரவு செலவு அறிக்கை

| வரவு | | | செலவு | | |
|---|---|---|---|---|---|
| விபரம் | கு.இல | தொகை | விபரம் | கு.இல | தொகை |
| ஆரம்பக் காசு மீதி | | 59751.19 | கால்கோல்விழா | A | 103311.00 |
| ஆரம்ப வங்கி மீதி | | 660134.58 | விளையாட்டுப்போட்டி | B | 72905.00 |
| மா.உதயகுமார் - சுவிஸ் | | 458015.00 | கண்காட்சி | C | 12323.00 |
| க.கெங்காதரன் | | 45000.00 | கலைவிழா | D | 16868.00 |
| பாலர் பாடசாலை அனுமதிக்கட்டணம் | | 78600.00 | பாலர் பாடசாலை செலவினம் | E | 466305.00 |
| போட்டோக் கொப்பி | | 15490.00 | மண்டசெலவீனங்கள் | F | 380978.00 |
| பிரதேச செயலக வரவுகள் | | 19270.00 | பரிசளிப்பு விழா | G | 56385.00 |
| சங்கக்கடை வாடகை | | 15000.00 | சனசமூக நிலைய செலவுகள் | H | 75782.50 |
| மண்டப நிகழ்வுகளின் வரவுகள் | | 479500.00 | ஒப்பந்த வேலை | I | 632712.00 |
| மைய ஊர்தி | | 14000.00 | பத்திரிகைச் சஞ்சிகைச் செலவுகள் | J | 71525.00 |
| பத்திரிகைச் சஞ்சிகை நன்கொடை | I | 71525.00 | வங்கிக் செலவீனங்கள் | K | 630.29 |
| வாடகை வருமானங்கள் | II | 46654.00 | வங்கி மீதிகள் | L | 285368.76 |
| சந்தா, அங்கத்துவம் பத்திரிகை விற்பனை | III | 1720.00 | நூல் நிலைய செலவுகள் | M | 70905.00 |
| பரிசளிப்பு விழா வரவுகள் | IV | 50000.00 | ஏனையவை | N | 200000.00 |
| விளையாட்டுப்போட்டி வரவுகள் | V | 26250.00 | நவராத்திரிப்பூசை | | 4897.00 |
| ஒப்பந்த வேலை வரவுகள் | VI | 446853.04 | | | |
| ஏனைய வரவுகள் | VII | 26535.00 | காசு மீதி | | 129023.20 |
| பிரதேச சபை வரவுகள் | VIII | 25000.00 | | | |
| வங்கி வட்டி (சேமிப்புக் கணக்கு) | IX | 50620.94 | | | |
| மொத்தம் | | 2579918.75 | | | 2579918.75 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வங்கி வட்டி IX

| | | | |
|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி | 7345055 | 22781.42 |
| 2 | தேசிய சேமிப்பு வங்கி | 10032013375-2 | 2186.77 |
| 3 | தேசிய சேமிப்பு வங்க | 10032014042-2 | 82.19 |
| 4 | கொமர்ஷல் வங்கி | 8108012710 | 6895.28 |
| 5 | கொமர்ஷல் வங்கி | 8108011570 | 11063.92 |
| 6 | HNB | 118026037981 | 10.38.82 |
| 7 | HNB | 118020039003 | 5818.48 |
| 8 | HNB | 118020198903 | 754.06 |
| | | | 50620.94 |

## விளையாட்டுப் போட்டி நன் கொடைகள் V

| | |
|---|---|
| சி.மதியழகன் | 2500.00 |
| க.இந்திரகுமார் | 5000.00 |
| கு.முருகானந்தன் | 2500.00 |
| வே.விசுவலிங்கம் | 2500.00 |
| ஸ்ரீ.இந்திராணி | 1500.00 |
| மாணவர் அன்பளிப்பு (49) | 12250.00 |
| | 26250.00 |

## ஒப்பந்தவேலை வரவுகள் VI

| | |
|---|---|
| அயித்தபுலம் முருகன் கோவில் வேலை வரவு | 128847.42 |
| பணிக்கர் கோவில் குறடுவேலை வரவு | 86850.00 |
| வட்டதெனி வீதி வரவு | 180000.00 |
| பிடி பணம் | 7750.00 |
| பிடி பணம் - 100 நாள் வேலைத்திட்டம் -2015 | 24097.57 |
| பிடி பணம் - 2014 DCB | 4820.00 |
| பிடி பணம் - 2014 DCB | 14488.00 |
| | 446853.04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திக்கம் பாலர் பாடசாலையின் 2016ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவுகள்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# திக்கம் பாலர் பாடசாலையின் 2016ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவுகள்











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 2016ம் ஆண்டு சுற்றுப்போட்டியின் பதிவு




திக்கம் பாலர் பாடசாலையின் 2016ஆம் ஆண்டு நிகழ்வுகளின் பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திக்கம் மத்திய சனசமூக நிலையம்

## 2016ம் ஆண்டுக்கான நிர்வாக சபை

தலைவர் : திரு.ந.பிரியதர்சன்
செயலாளர் : திரு.க.சுதேஸ்
பொருளாளர் : திரு.செ.சதாகரன்
உப தலைவர் திரு.கு.நவநீதன்
உப செயலாளர் : திரு.க.ஜெயந்தன்

நிர்வாக சபை உறுப்பினர்கள் :
திரு.ச.சாந்தரூபன்
திரு.ச.விதுரன்
திரு.தி.சிவசக்தி
திரு.கு.தினேஸ்
திரு.சி.கார்த்தீபன்
திரு.ப.கணேசபாலினா
திரு.க.சதீஸ்
திரு.கி.அமிர்தலிங்கம்
திரு.மு.செ.சரவணபவா
திரு.மு.இரத்தினம்

உப நூலகர் : திரு.க.நிரோசன்
கணக்காய்வாளர்: திரு.ச.சரவணபவான்
காப்பாளர்கள்:
திரு.க.பிறைசூடி [இந்தியா]
திரு.க.யோகானந்தன் [சுவிஸ்]
திரு.சி.கணேசமூர்த்தி [கனடா]

K.M.V Printers - Manthikai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org